# கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை

## சட்ட பீடம்

## சட்டமாணிப் பரீட்சை, ஆண்டு II – 2022

## ஒப்பந்தச் சட்டம்

(மூன்று மணித்தியாலம்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை: **06**

**மூன்று (03)** வினாக்களுக்கு **மட்டும்** விடையளிக்க.
(தெளிவற்ற கையெழுத்துக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.)

---

01.

(i) லக்மாலி என்பவள் அவளது திருமண ஆடையை தைப்பதற்கு பிரபல வடிவமைப்பாளரான சுனிதா என்பவளுக்கு கொடைமுனைவு ஒன்றைச் செய்தாள். சுனிதாவின் ஆடை வடிவமைப்புக் கடையில் துணியின் வகை, வடிவமைப்பு மற்றும் நிறம் என்பவற்றைத் லக்மாலி தேர்ந்தெடுந்தாள். மேலும் திருமணத்திற்கு இரண்டு நாட்களுக்கு முன்னதாக ஆடை விநியோகிக்கப்படும் என எதிர்பார்ப்பதாகவும் அவள் குறிப்பிட்டாள். சுனிதா ஆடைக்கான செலவினத்தை மதிப்பீடு செய்து அதன் விலை ரூபா 250,000/- எனக் கூறினாள். ஆடை வடிவமைப்புக் கடையினை விட்டு வெளியேறிய லக்மாலி இரண்டு நாட்களின் பின்னர் குறித்த ஆடையினை தனக்கு ரூபா 220,000/- இற்குத் தருமாறு கேட்டு சுனிதாவுக்கு குறுஞ் செய்தியொன்றினை அனுப்பினாள். சுனிதா அச்செய்திக்கு பதிலளிக்கவில்லை. லக்மாலி ஆடை விநியோகிப்படுமென எதிர்பார்த்த தினத்தில் சுனிதாவுக்கு தொலைபேசி அழைப்பொன்றை ஏற்படுத்தியதுடன் லக்மாலி கேட்டுக்கொண்ட விலை சுனிதாவுக்கு நட்டத்தினை ஏற்படுத்தும் என்பதனால் அவ்வாடை தைக்கப்படவில்லை என்பதனை அறிந்து கொண்டாள். சுனிதா ஒப்பந்தத்தினை மீறியுள்ளதாக லக்மாலி வாதிடுகிறாள்.

(அ) தரப்பட்ட நிகழ்வின் அடிப்படையில், திறத்தவரிடையே வலிதான ஒப்பந்தமொன்று உள்ளதா என்பதனை ஆராய்க. உமது விடையானது தீர்ப்புச் சட்டத்தால் ஆதாரப்படுத்தப்படல் வேண்டும்.

(40 புள்ளிகள்)

(ஆ) ஒப்புக்கொண்ட விலையில் மாற்றம் செய்வதற்குப் பதிலாக, தேர்ந்தெடுத்த துணிவகையானது இரவுநேரப் புகைப்படம் எடுப்பதற்குப் பொருத்தமானதா என்று லக்மாலி வினவியிருப்பின் உமது விடை வேறுபடுமா?

(20 புள்ளிகள்)

(ii) ஏற்பினைத் தெரியப்படுத்துவது தொடர்பான 'அஞ்சல் விதியின்' (Postal Rule) முக்கியத்துவம் பொதுச் சட்டத்தின் கீழ் வலுவாக நிறுவப்பட்டுள்ளது.

நீர் உடன்படுகின்றீரா? மரபார்ந்த ஒப்பந்த உருவாக்கத்தில் அஞ்சல் விதியின் தன்மை மற்றும் செல்வாக்கு ஆகியவற்றினையும் உடனடி ஒப்பந்தங்களில் (instantaneous contracts) அதனது நிலைப்பாட்டினையும் ஆராய்க. உமது விடையானது தீர்ப்புச் சட்ட அதிகாரங்களால் ஆதாரப்படுத்தப்படல் வேண்டும்.

(40 புள்ளிகள்)

02. "உரோம டச்சுச் சட்டத்தின் கீழ் தார்மீகக் கடமையொன்றை நிறைவேற்றுவதற்கு அல்லது பெருந்தன்மையான அல்லது நற்செயல்களை செற்வதற்கு வேண்டுமென்று செய்யப்பட்ட வாக்குறுதியொன்று, உரோமச் சட்டத்திற்கமைவாக *justa causa debendi* என்பதானது வாக்குறுதியை நிலை நிறுத்துவதற்கு பேதுமானது என்பதோடு அது ஆங்கிலச் சட்டம் கையாளுகின்ற வாக்குறுதி ஒன்றிற்கான நற் பிரதிபயன் (good consideration) என்பதனை விடவும் பரந்ததொன்றாகும்."

– *Indian Bank v. Acuity Stock Brokers (Pvt) Limited* [2011] 2 Sri LR 150.

மேற்போந்த கூற்றின் பின்னணியில், தீர்ப்புச் சட்ட உதாரணங்களுடன் உரோமச் சட்டத்தின் கீழான நல்லேது (*justa causa*) மற்றும் ஆங்கிலச் சட்டத்தின் கீழான பிரதிபயன் (consideration) என்பவற்றை வேறுபடுத்துக. இலங்கையில் இவ்வொவ்வொரு கருத்தேற்பும் எந்த அளவிற்கு மற்றும் எச்சூழ்நிலைகளில் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன என்பதனை உதாரணங்களுடன் விளக்குக.

(100 புள்ளிகள்)

03. 'ANC Devices' என்பது கொழும்பிலுள்ள பிரபல கணினி வன்பொருள் விற்பனையாளராகும்.. 'ITT' என்பது தகவல் தொழிநுட்பம் கற்பிக்கும் நிலையமொன்றாகும். 'ITT' தனது புதிய கல்வியாண்டை 2022 செப்டம்பர் 10 ஆம் திகதி தொடங்க திட்டமிட்டு, ANC Devices இடம் 30 மேசைக்கனணிகள் மற்றும் 15 மடிக்கணினிகளை வேண்டியிருந்ததுடன் (ordered) செப்டம்பர் 10 திகதிக்கு முன்னர் பொருத்துவதற்கு ஏதுவாக செப்டம்பர் 08 காலை அல்லது அதற்கு முன்னரே அக்கணினிகளை விநியோக்கிக்கும்படி கேட்டுக் கொண்டது. கனமழை காரணமாக ANC Devices செப்டம்பர் 09 அன்றே வேண்டப்பட்ட பொருட்களை விநியோகித்ததோடு நாட்டின் தற்கால பொருளாதார நெருக்கடி காரணமாக கணினிகளின் விலையினை அதிகரிக்க ITT இற்கு தெரிவித்தது. ITT 'ESUS' மடிக்கணினிகளை வேண்டியிருந்தாலும், ANC 'BP' வகை மடிக்கனணிகளை விநியோகித்தது. ஒப்பந்தத்தின்படி, ITT இன் கணினி ஆய்வு கூடத்தில் கணினிகளை பொருத்துவதற்கு ANC ஒப்புக்கொள்கிறது. "எல்லா சாதனங்களும் முறையாக பொருத்தப்படும் வரை அவையனைத்தும் ANC இன் கட்டுப்பாட்டிலேயே இருக்க வேண்டும்; இவ்வாசகத்திற்கு இணங்கிச் செயற்படாமையினால் ஏற்படும் தவறுகளுக்கு ANC பொறுப்பேற்காது" என்பதாக ஒப்பந்தத்தின் வாசகமொன்று குறிப்பிடுகின்றது. ITT இன் தொழிநுட்ப அலுவலர் குறித்த சாதனங்களை சரிபார்த்த போது, மின் விநியோகத்தில் ஏற்பட்ட சீரின்மை (fluctuation) காரணமாக 6 மேசைக்கணினிகள் பழுதடைந்திருந்தன. தற்சமயம் குழப்பமடைந்துள்ள திறத்தவர்கள் உமது ஆலோசனையை நாடுகின்றனர்.

'ஒப்பந்த வாசகங்கள்' தொடர்பான சட்டத்தினைக் கருத்திற்கொண்டு திறத்தவர்களுக்கு ஆலோசனை வழங்குக.

(100 புள்ளிகள்)

04.

(i) மேர்வின் இரத்னபுரியில் அமைந்துள்ள தனது 40 பேர்ச் காணியினை விற்க விரும்புகின்றான். அவனது காணி வெள்ள அபாயத்தில் உள்ளதாக நகர சபை மேர்வினுக்கு தெரிவித்தது. ஆதலால், மேர்வின் அதனை உடனடியாக விற்க விரும்பியதோடு அதனை அவனது உறவினர்களுள் ஒருத்தியான சுசிலா என்பவளை வாங்குமாறு கேட்டான். சுசிலா குறித்த காணியை வாங்காவிட்டால், மேர்வினின் காணிக்கு அருகில் நடந்துகொண்டிருக்கும் சுசிலாவின் கட்டுமான வேலை தடைப்படலாம் எனவும் அவன் சுசிலாவுக்கு கூறினான். எழுபது வயதான சுசிலா அவ்வாதனத்தை வாங்குவதற்கு ஒருபோதும் விரும்பவில்லையாயினும் மேர்வினின் அழுத்தம் காரணமாகவே அதனை வாங்க தீர்மானித்தாள். பின்னர், கனமழை காரணமாக அக்காணி வெள்ளத்திற்குள்ளாதனை சுசிலா

தெரிந்துகொண்டாள். துற்போது அவள் அவ்வொப்பந்தத்தினை இரத்துச் செய்ய விரும்புகிறாள்.

சுசிலாவுக்கு ஆலோசனை வழங்குக.

(40 புள்ளிகள்)

(ii) Modern Furniture என்பது காலியில் அமைந்துள்ள மரம் மற்றும் செயற்கை நார் (fiber) தளபாடங்களை விற்பனை செய்யும் தளபாடக் கடையாகும். ஜெயதுங்க என்பவன், தனது புதிதாக கட்டப்பட்ட வீட்டிற்கு தளபாடங்களை வாங்குவதற்கு விருப்பம் கொண்டதோடு மரத்திலான தளபாடங்களை அதிலும் குறிப்பாக தேக்கிலான தளபாடங்களைத் தேடினான். ஜெயதுங்க தனது விருப்பங்களை தெரியப்படுத்தியதோடு Modern Furniture தமது எல்லா தளபாடங்களையும் அவற்றுள் சில மரத்தாலும் சில செயற்கை நாரினாலும் செய்யப்பட்டிருந்தனனை அவனுக்குக் காண்பித்தது. ஜெயதுங்க தான் தேக்கிலிலேயே எல்லா பொருட்களையும் கொள்வனவு செய்துள்ளான் என்ற புரிதலோடு நிறைய பொருட்களை கொள்வனவு செய்தான். சில மாதங்களின் பின்னர், சில தளபாடப் பொருட்கள் செயற்கை நாரினால் செய்யப்பட்டுள்ளதாகவும் அவை நல்ல தரத்தில் இருக்கவில்லை எனவும் அவன் கண்டுகொண்டான். இது பற்றி ஜெயதுங்க Modern Furniture இடம் வினவியபோது தாம் பழுப்பு நிறம் (brown) பூசப்பட்ட மரம் மற்றும் செயற்கை நாரினாலான இருவகை பொருட்களையும் விற்றதாகத் தெரிவித்தனர். ஜெயதுங்கயினால் வேண்டப்பட்ட அனைத்துப் பொருட்களையும் தாம் விற்றுள்ளோம் என்ற கருத்தில் Modern Furniture இருந்தது.

சட்டச் சிக்கல்களை ஆராய்க. ஜெயதுங்க தேக்குத் தளபாடங்களை வாங்க விரும்பியிருந்தான் என Modern Furniture அறிந்திருந்தால் உமது விடை வேறுபடுமா? விளக்குக,

(60 புள்ளிகள்)

05.

(i) பின்வரும் சூழ்நிலைகளில் வலிதான ஒப்பந்தமொன்று உருவாக்கப்பட்டுள்ளதா என்பதை காரணங்களுடன் தருக.

(அ) மூலிகை ஒப்பனைப் பொருள் உற்பத்தி மற்றும் விற்பனையில் ஈடுபடும் நிகம்புவிலுள்ள AV (Pvt) Ltd என்பது பிரபல்யம் பெற்றதொரு கம்பனியாகும். இக்கம்பனி 'சுவத்' மற்றும் 'ஹந்த' எனும் வெண்மைக் களிம்புகளை (fairness creams) விற்பதற்காக 1980 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க ஒப்பனைச்

சாதனங்கள், உபாயங்கள் மற்றும் அவுடதங்கள் சட்டத்தின்படி இரண்டு வகையான உரிமங்களைக் கொண்டுள்ளது. 'ஹந்த' வெண்மைக் களிம்பினை உற்பத்தி செய்வதற்கான AV கம்பனியின் உரிமம் அண்மையில் காலாவதியாகியுள்ளது. அதனை மீளப் புதுப்பிப்பதற்கு அக்கம்பனி மறந்து போயிருந்தாலும் சில வாரங்களில் அதனைப் புதுப்பிப்பதற்குத் திட்டமிட்டிருந்தது. மேற்போந்த சட்டத்தின் பிரிவு 2(1) ஆனது "ஒப்பனைச் சாதனங்கள், உபாயங்கள் மற்றும் அவுடதங்கள் அதிகார சபையினால் வழங்கப்பட்ட உரிமம் இன்றி எந்தவொரு ஒப்பனைச் சாதனங்களையும் ஆளொருவர் உற்பத்தி செய்யவோ அல்லது ஏற்றுமதி செய்யவோ கூடாது" என ஏற்பாடு செய்கிறது. எவ்வாறாயினும், AV கம்பனி நிமல் என்பவனுடன் 500 'ஹந்த' மற்றும் 'சுவத்' களிம்பு போத்தல்களை விற்பதற்கு உடன்படிக்கை ஒன்றில் ஈடுபட்டதுடன் அதற்கான கொடுப்பனவினை ஆறு மாதங்களின் பின்னர் பெற்றுக்கொள்வதற்கும் உடன்பட்டது.

(ஆ) தாதி உத்தியோகத்தரான பமினா என்பவள் மார்ச் 2018 இல் "First Care" எனும் தனியார் மருத்துவமனையில் இணைந்துகொண்டாள். அவள் "First Care" இல் இணைந்து கொண்டவேளை செய்துகொண்ட ஒப்பந்தமானது, பமினா "First Care" சேவையில் இருந்து விலகி அடுத்துவரும் பத்து (10) வருடங்களுக்கு இலங்கையிலுள்ள வேறெந்த மருத்துவமனையிலும் தாதி உத்தியோகத்தராக இணைவதைத் தடைசெய்யும் நிபந்தனை ஒன்றை உள்ளடக்கியிருந்தது. மார்ச் 2021 இல் பமினா "First Care" இலிருந்து இராஜினாமா செய்ததோடு DD எனும் தனியார் மருத்துவமனையில் தாதி உத்தியோகத்தரொருவளாக இணைந்தாள். பமினா தனக்கும் "First Care" இற்கும் இடையேயான ஒப்பந்தம் வலிதற்றது என்று எண்ணுகிறாள்.

(2x25=50 புள்ளிகள்)

(ii) திருமதி பெர்னாண்டோவிற்கு மாத்தறை மிரிஸ்ஸவில் இரண்டு விருந்தினர் இல்லங்கள் உள்ளன. அவள் 2019 ஜனவரியில், ஐரோப்பாவிலிருந்து வரும் சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கென தனது விருந்தினர் இல்லங்களை வாடகைக்கு விடுவதற்கு ABC Services உடன் ஒப்பந்தமொன்றில் ஈடுபட்டாள். திருமதி பெர்னான்டோவிற்கு 30 நாட்குளுக்கு செலுத்தப்பட வேண்டிய தினசரி வாடகையினை நிலுவையாக வைத்து, ABC Services ரூபா 300000 இனை திருமதி பெர்னாண்டோவுக்கு நேரடியாகச் செலுத்தியது. விருந்தினர் இல்லங்களில் சில திருத்தவேலைகள் அவசியப்பட்டதால், சுற்றுலாப் பயணிகளின் வருகைக்கு ஏற்ப, 2019 மே 30 இற்குள் அத்திருத்தவேலைகளை முடிக்கும்படியாக திருமதி பெர்னாண்டோ Super Handyman Services (SHS) இனை வேலையில்

ஈடுபடுத்தினாள். அவள் ரூபா 40000 இனை SHS இற்கு செலுத்தியதுதோடு மிகுதிரூபா 60000 வேலைகள் முடித்தன் பின் செலுத்தப்படும்.

பின்வரும் நிகழ்வுகளின்படி திருமதி பெர்னாண்டோவின் ஒப்பந்தங்களின் விளைவுகளை ஆராய்க.

(அ) 2019 மே 15 அன்று, SHS முதலாவது விருந்தினர் இல்லத்தில் தமது வேலைகளை நிறைவு செய்து இரண்டாவதில் வேலைகளை தொடங்க முன்னர், இரண்டாவது இல்லம் கடுமையான மின்னலினால் தாக்கப்பட்டு, தீ உண்டாகிதனால் இரண்டு இல்லங்களும் அழிவடைந்தன.

(ஆ) மேலே கூறப்பட்ட சம்பவம் (அ) நிகழவில்லை எனக் கருதி, ஆனால் COVID-19 காரணமாக சுற்றுலாப் பயணிகள் வருகைக்கு அரசாங்கம் விதித்த எதிர்பாராத தடையின் விளைவாக, ABC Services எதிர்பார்த்ததை விட குறைவான சுற்றுலாப் பயணிகளைப் பெற்றது. எனவே, ABC Services 2019 மே 25 அன்று திருமதி பெர்னான்டோவிடம் அவளது விருந்தினர் இல்லங்களைப் பயன்படுத்தத் தேவையில்லை என்று கூறியதுடன், அவர்களது ஒப்பந்தம் முடிவடைந்துவிட்டதாகவும் கருதியது. மேலும் தம்மால் ஏற்கனவே செலுத்தப்பட்ட ரூபா 300000 இனையும் திருப்பிச் செலுத்தமாறு கோரியது.

(2x25=50 புள்ளிகள்)

06. ரஞ்சித் என்பவன் கொழும்பில் ஆடை வியாபாரத்தில் ஈடுபட்டு வந்தான். அவன் ஐந்து நட்சத்திர உணவகம் ஒன்றிற்கு 250 உயர்தர திரைச்சீலைகளை தயாரிப்பதற்கான ஒப்பந்தமொன்றில் ஈடுபட்டான். குறித்த திரைச்சீலைகள் ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்டு மூன்று மாதங்களின் பின்னர் விநியோகிப்படுவதாக இருந்தன. ரஞ்சித் திரைச்சீலைகளை தயாரிப்பதற்கு இந்தியாவிலிருந்து துணிகளை இறக்குமதி செய்யவும் அவற்றை தனது களஞ்சியசாலைக்கு விநியோகம் செய்யவும் நுவான் என்பவனுடன் இன்னுமொரு ஒப்பந்தத்தில் ஈடுபட்டான். துணிகள் ஒரு மாதத்திற்குள் நுவானை வந்தடைந்தாலும், அவன் இன்னொரு வேலைப்பளுவில் இருந்ததனால், குறித்த துணிகளை துறைமுகத்திலிருந்து வெளியகற்றி எடுப்பதில் தாமதம் ஏற்பட்டது. குறித்த துணிகளை விநியோகிப்பதானது ஐந்து மாதங்களுக்கு தாமதமானதோடு அதன்விளைவாக, ஒப்புக்கொள்ளப்பட்ட நேரத்தில் உணவகத்திற்கு திரைச்சீலைகளை விநியோகிப்பதனையும் இது பாதித்தது.

உணவக நிர்வாகம் திரைச்சீலைகளது விநியோகத்தினை ஏற்க மறுத்ததுடன் ரஞ்சித் ஒப்பந்தத்தை மீறிவிட்டதாகவும் வாதிட்டது. விசேட நிகழ்ச்சி ஒன்றிற்கு பயன்படுத்த எண்ணியிருந்த திரைச்சீலைகள் விநியோகிக்கப்படாமையினால், தாம் வியாபாரத்தில்

எதிர்பார்த்த இலாபத்தை இழந்ததால், அவர்கள் ரஞ்சித்திடம் நஷ்டஈடு கோர விரும்புகின்றனர். ரஞ்சித்துக்கும் உணவகத்துக்கும் இடையேயான ஒப்பந்தத்தில், ஒப்பந்தக் கடமைகளை நிறைவேற்றாத பட்சத்தில் தவறிழைக்கும் திறத்தவர் ரூபா 5 மில்லியன் இழப்பீடாக செலுத்த வேண்டும் எனக் கூறுகிறது. ரஞ்சித் துணி விநியோகம் செய்யப்படும்வரை அது பற்றி விசாரிக்காமல் கவனயீனமாக இருந்ததாக நுவான் வாதிடுகிறான்.

வழங்கப்பட்டுள்ள நிகழ்வுகளில் ஏதேனும் நிவாரணங்கள் உள்ளவனா என ரஞ்சித் மற்றும் உணவக முகாமைத்துவத்திற்கு ஆலோசனை வழங்குக. உமது விடையானது தீர்ப்புச்சட்ட அதிகாரங்களால் ஆதாரப்படுத்தப்படல் வேண்டும்.

(100 புள்ளிகள்)

********